**செய்தி வெளியீடு எண்: 670** **நாள்: 08.11.2012**

<u>பத்திரிக்கை செய்தி</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்களின் ஆணையின் படி வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, விலையில்லா அரிசி, ஏனைய பருப்பு முதலான அத்தியாவசியப் பொருட்கள் பொது விநியோகத் திட்டக் கிடங்கில் இருந்து நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படுவதையும், குடும்ப அட்டைதாரர்கள் அனைத்து பொருட்களையும் பெறுவதை உறுதி செய்திடும், ஆய்வுக்கூட்டம், இன்று (08.11.2012) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் “விலையில்லா அரிசி'' வழங்கும் திட்டத்தின் கீழ் 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் தரமான புழுங்கல் அரிசி, பச்சரிசி அனைத்து கூட்டுறவு மற்றும் அமுதம் நியாய விலை அங்காடிகளில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து அங்காடிகளிலும் குடிமைப்பொருள் வழங்கல் துறை ஆணையாளரின் நவம்பர் 2012க்கான மாதாந்திர ஒதுக்கீட்டின்படி போதுமான இருப்பு வைக்கப்படுவதுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலும் 3 இலட்சத்து 17 ஆயிரம் மெ.டன் புழுங்கல் அரிசியும், 36,000 மெ.டன் பச்சரிசியும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்க சர்க்கரை 36332 மெ.டன் கையிருப்பு உள்ளது. நவம்பர்–2012 ஒதுக்கீடான 37163 டன்னில் இது வரை 23909 டன் நகர்வு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 13254 டன் வழங்க போதுமான இருப்பு உள்ளது.

மேலும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்படும் துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு ஆகியனவும் தேவையான அளவு கையிருப்பு உள்ளது. அங்காடிகளின் தேவைக்கேற்ப அவ்வப்போது நியாய விலை அங்காடிகளுக்கு தரமான துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் முதலியன நகர்வு செய்யப்படுகிறது. நவம்பர் 2012 மாத ஒதுக்கீடு 13,915 மெ.டன் துவரம் பருப்பில் இதுவரை 5000 மெ.டன் நகர்வு செய்யப்பட்டுள்ளது.

கையிருப்பில் 2,448 மெ.டன் இருப்பில் உள்ளது. மேலும் தேவைக்கு டெண்டர் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு 4,000 மெ.டன் கிடங்குகளுக்கு வரப்பெறுகிறது.

உளுத்தம்பருப்பு 10,430 மெ.டன் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் இதுவரை 6,000 மெ.டன் அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டுள்ளது. கையிருப்பில் 4,900 மெ.டன் உளுத்தம்பருப்பு உள்ளது. இம்மாத ஒதுக்கீட்டில் இதுவரை 29 இலட்சம் பாமாயில் பாக்கெட்டுகள் அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டுள்ளன. கையிருப்பில் 3 இலட்சத்து 88 ஆயிரம் பாமாயில் பாக்கெட்டுகள் உள்ளன. மேலும், 22,500 மெ.டன் பாமாயில் கப்பல் மூலம் மத்திய அரசு நிறுவனங்கள் மூலம் தருவிக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு குறைவாக வழங்கினாலும் அனைவருக்கும் மண்ணெண்ணெய் கிடைக்கும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் இம்மாத ஒதுக்கீடு குறைவின்றி வழங்க ஆவன செய்யப்படும் என மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். மேலும், தீபாவளி பண்டிகைக்கு தேவையான அனைத்து அத்தியாவசிய பொருட்களையும் குடும்ப அட்டைதாரர்கள் பெற்றிடும் வகையில் 11.11.2012 ஞாயிற்றுக்கிழமை பொது விநியோகத்திட்ட கிடங்குகள் மற்றும் கூட்டுறவு, அமுதம் நியாய விலை அங்காடிகளுக்கு வேலை நாளாக அறிவிக்கப்படுகிறது என்றும் இதற்குப் பதிலாக சனிக்கிழமை ஈடுசெய்யும் விடுமுறையாக அறிவிக்கப்படுகிறது என்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் உணவுத்துறை செயலாளர் திருமதி.M.P. நிர்மலா, இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு. P.M .பஷீர் அஹமது, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு. M. சந்திரசேகரன், இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**